# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate

Official Property Record



Digitally Verified Record - Powered by Verified RealEstate™

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம்**
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : **திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,**

**ந.க.எண். 5937/2018 செம3** **நாள் : 07.06.18**

பொருள் : சிறப்பு குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காரணைப்புதுச்சேரி ஊராட்சி / கிராமம், ச.எண். 348/5A-ல் 578.91 சமீ பரப்பளவு மனையிடத்தில் 1031.05 சமீ கட்டிட பரப்பில் ஸ்டில்ட் + 4 தளங்களுடன் 16 குடியிருப்புகள் கொண்ட உத்தேச சிறப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. மனுதாரர் திருமதி. B. அம்சவல்லி, கூடுவாஞ்சேரி அவர்களது கடிதம் நாள் : 10.05.18
2. வேளாண்மை இணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் மூ.மூ.1920/2018/இ3 நாள் : 26.03.18
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10 முதி1 நாள் : 20.9.16-ன்படி edcr online Unique ID. SCR-07/06/2018:79235 நாள் : 07.06.18 Online Application No. : 201800202022663 நாள் : 17.04.18
4. அரசாணை எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 28.03.12
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 04.4.2012
7. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள் : 31.05.18 (கட்டணங்கள் கோரப்பட்டது)
8. மனுதாரர் திருமதி. B. அம்சவல்லி, கூடுவாஞ்சேரி அவர்களது கடிதம் நாள் : 04.06.18 (I & A கட்டணம் (ம) நன்னிலை வரி செலுத்தப்பட்டது)
9. அரசாணை எண். 53, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 16.04.2018
10. அரசாணை (நிலை) எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.17

----------------

**உத்தரவு :**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காரணைப்புதுச்சேரி ஊராட்சி / கிராமம், ச.எண். 348/5A-ல் 578.91 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு 'ABCD' என எல்லையிட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் 1031.05 சமீ கட்டிட பரப்பில் ஸ்டில்ட் + 4 தளங்களில் 16 குடியிருப்புகளுடன் கீழ்கண்டவாறு உத்தேசித்துள்ள குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு **க.வ./ந.ஊ.து.இ(செம) எண். 38/2018** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

மொத்த மனைப்பரப்பு : **578.91** சமீ

| கட்டிட விபரம் | | FSI Area | |
|---|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | - | 187.05 சமீ | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | - | 257.76 சமீ | 4 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | - | 257.76 சமீ | 4 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | - | 257.76 சமீ | 4 குடியிருப்புகள் |
| நான்காம் தளம் | - | 257.76 சமீ | 4 குடியிருப்புகள் |
| **Total Builtup Area** | - | **1031.05 சமீ** | 16 குடியிருப்புகள் |

FSI = 1.781
PC = 44.53%

பார்வை(4)ல் கண்ட அரசாணையின்படி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம் மற்றும் நன்னிலை வரி ஆகியன செலுத்தக்கோரி பார்வை(7)ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டு, பார்வை(8)ல் கண்ட மனுதாரா் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய I & A கட்டணம் **ரூ. 3,95,000/-** மற்றும் நன்னிலை வரி ரூ. **3,000/-** ஆகியன பெறப்பட்டுள்ளது. பார்வை(9)ல் கண்ட அரசாணையின் படி பரிசீலனைக் கட்டணம் ரூ.41,500/- பெறப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
5. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set back) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
6. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4(3)), Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.
7. பார்வை(12)ல் காணும் அரசாணை வரிசை எண். 3-ன்படி மேற்படி மனைக்கு ரூ.1000/- கூராய்வு கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். மேலும் வரிசை எண். (9)-ன்படி "use conversion charge at the rate of 3% of the market value fixed under section 47-AA of the Indian Stamp Act, 1899 (Central Act 2 of 1899) and deposit the amount in Government head of account and grant permission carrying out the development" என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி மனையின் பரப்பிற்கு சந்தை மதிப்புப்படி (market value of land) 3% தொகையினை கீழ்கண்ட அரசுக் கணக்கில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி தொகை பெறப்பட்ட விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

   **<u>Head of Account :</u>**

   "0217 Urban Development - 60 other Urban Development Schemes - 800 other Receipts, AS Receipts under Land Use Conversion Charges"
   (DPC : 0217-60-800-AS 0005)"

<u>நிபந்தனைகள் :-</u>

1. உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U"Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

முத்திரையிடப்பட்ட வரைபடம் இரண்டு மற்றும் செயலாணை கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7/6/18

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

7/6/18

இணைப்பு : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2
(2 x 1 = 2)

பெறுநர் : தனி அலுவலர்/ காரணைப்புதுச்சேரி ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : திருமதி. B. அம்சவல்லி,
எண்.37, காந்தி நகர், 2வது தெரு,
கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம்-603 202.

காரணைப்புதுச்சேரி ஊராட்சி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை - திரு. V. முத்து சுந்தரம்

ந.க.எண். 27 /2018-19 நாள்: 15-06-2018

பொருள் : கட்டிட வரைபட அனுமதி - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் – காரணைப்புதுச்சேரி ஊராட்சி, ......................... கிராமம், நில அளவை எண். - ...........348/5A...............மனை எண் - ..............—.............. – ல் கட்டிடம்/சுற்றுச்சுவர்/கிணறு/முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடல்

பார்வை : 1) அரசு ஆணை எண். 255 நாள் 19.08.1997
2) DTCP Approved Date and Number - ...5937/18...நாள்: 7-6-18
3) இவ்வலுவலக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ZONE - 1) அவர்களின் ஆய்வறிக்கை நாள் – 15.6.2018

********

**உத்தரவு:**

திருமதி. B. அம்சவள்ளி....என்பவர் காரணைப்புதுச்சேரி ஊராட்சி ......—........ கிராமம், நில அளவை எண். ............348/5A...................................... மனை எண். ......................... ல் ஆகிய பகுதிகளில் கட்டிடம் /சுற்றுச்சுவர் /கிணறு/ கழிப்பிடம் குளியலறை/ கடைகள் /முதல் தளம் /இரண்டாம் தளம்/ மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவைகள் கட்டுவதற்கு கட்டிட வரைபடத்திற்கு கவ/தனி அலுவலர் (செமு) எண். ..27... /2018-2019 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது ..15.06.2018....... நாளது முதல் 14-06-2019.....ம் நாள் வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும் அனுமதி கட்டணம் ரூ..60,465/-..... (ரூபாய்..அறுபது ஆயிரத்து...நானூற்று...அறுபத்தைந்து............................ மட்டும்) செலுத்தியமைக்கான பலவகை இரசீது எண். ..2222.... நாள் .15.06.2018.... மற்றும் அங்கிகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 3 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 2 மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட் சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.

4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. புறம்போக்கு மற்றும் இதர அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
7. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு தனி அலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
8. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் ( ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் ( அ) கட்டிட வரைபட ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
9. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
10. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்.
11. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிகுழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.
15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
காரணைப்புதுச்சேரி ஊராட்சி.

பெறுநர்
திரு மதி. B. அம்சவள்ளி.............
.37. 2 வது தெரு,.. காந்தி நகர்........
..கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம்

## Our services go beyond

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## Smarter Tools, Stronger Decisions

### Property Valuation & Cost Estimation
Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification
Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis
Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools
Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools
Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate